# ஒரு கிராமம்
# கூத்துப் பழகத் தொடங்குகிறது

காரை செ. சுந்தரம்பிள்ளை

1948 ஆம் ஆண்டு. அது ஒரு தைப்பொங்கல் நாள். நேரம் மாலை 5 அல்லது 6 மணியிருக்கும்.

காரைநகரில் பிட்டி ஒலைக் கிராமம் ஒரே குதூகலமாக உள்ளது. ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி. குழந்தைகளும் மகிழ்ச்சிப் பெருக்கில் நீந்துகின்றார்கள்.

அப்படி என்ன விசேசம்?

அன்று தான் கூத்துப் பழகுவதற்கு அண்ணாவியார் ஒலை (பிரதி) கொடுக்கப் போகிறாராம்.

அண்ணாவி வல்லி யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறார். வல்லி அக்காலத்தில் பிரபலமான நாட்டுக்கூத்து அண்ணாவியார். அவர் உடுக்கு வாசித்தால் அழுத பிள்ளையும் வாய்மூடிக் கேட்டுக் கொண்டிருக்குமே. காத்தான் கூத்துப் பழக்குவதில் அண்ணாவி வல்லிக்கு ஈடாக அக்காலத்தில் யாருமே இருக்கவில்லை.

அண்ணாவி வல்லி ஒரு பிறவிக் கலைஞர்.

பண்டாரி கந்தையர் வீட்டில் எல்லோரும் கூடுகின்றனர்.

பண்டாரி கந்தையர் மனேஜர்.

இந்த மனேஜர் என்ற சொல்லை எப்படியோ அந்தக் கிராம மக்கள் அறிந்து வைத்துள்ளனர்.

''மனேஜர் ஐயா! அண்ணாவியாருக்கு எங்கே சாப்பாடு ஒழுங்கு செய்தனீங்கள்'' முன் காத்தானாக நடிக்கப்போகும் சின்னத்தம்பியின் கேள்வி இது.

''ஏன்? எங்கடை வீட்டிலை தான்.'' மனேஜர் பதில் சொல்கிறார்.

''இல்லை மனேஜர் ஐயா... அண்ணாவியார் கொஞ்சம் தண்ணியும் பாவிக்கிறவர். நீங்கள் சுத்த சைவம் அதுதான் கேட்டனான்.''

''டேய் சின்னத்தம்பி, பேசாமல் உன்ரை வேலையைப் பார், எனக்கு என்ர வேலை தெரியும்''

சின்னத்தம்பி வாய் மூடி மௌனியாகின்றான்.

''மனேஜர்!''

''யாரவர்?''

''நான்தான் வைரவன்''

''அது தெரியுது. என்ன சங்கதி?''

'அண்ணாவியாருக்கு எங்கை சாப்பாடு?'

''என்ர வீட்டிலை தான்''

''இல்லை மனேஜர்... அண்ணாவியார் மச்சமாமிசமும் சாப்பிடுவர் என்று கேள்வி. அது தான் கேட்டனான்''

''அப்ப அண்ணாவியாருக்கு ஆடு, கோழி வெட்டச் சொல் விறியோ''

''இல்லை மனேஜர் அவர் பாவந்தானே''

''என்ன பாவம்?''

''மனேஜர் ஐயா! உங்களுக்கு உது தெரியாது''

''ஓ உனக்குக் கணக்கத் தெரியும்''

''மனேஜர் ஐயா! நீங்கள் சுத்த சைவம், அதுதான் சொன்னனான்''

''வைரவி! நான் பேயன் இல்லை. எனக்கு என்ன செய்ய வேண்டும் எண்டு தெரியும்''

''அப்பசரி; நான் வாறன்'' வைரவன் மெல்ல நழுவுகிறான்.

மனேஜர் பண்டாரி கந்தையரிடம் எல்லோருக்கும் அவ்வளவு பயபக்தி.

''மனேஜர் அப்பு!''

''ஆரது? தங்கத்தின்ரை பெடியே?''

''ஓம் அப்பு!''

''என்ன வேணும்?''

''அண்ணாவியாருக்கு எங்க வீட்டிலை சாப்பாடு செய்யிறு தோவெண்டு அப்பு கேக்கச் சொன்னவர்!''

''அண்ணாவியாருடைய சாப்பாட்டை நான் கவனிக்கிறனாம் எண்டு போய்ச் சொல்லு.''

''மனேஜர் அப்பு, இதை அண்ணாவியாரிட்டை அப்பு குடுக்கச் சொன்னவர்''

''என்ன மோனை இது?..''

''சாராயப் போத்தல்''

''சாராயப் போத்தலோ... அண்ணாவியாருக்கு இது தேவையில்லை. நீ கொப்பாவிட்டைக் கொண்டுபோய்க் குடு''

பொடியன் போத்திலோட திரும்பிப் போகிறான்.

''பெடியனிட்டை சாராயப் போத்தலைக் குடுத்தனுப்பிறான் அந்த விசரன்!'' அண்ணாவியார் முணுமுணுக்கிறார்.

இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அண்ணாவியார் மெல்ல மனேஜர் பண்டாரி கந்தையாவிடம் வருகிறார்.

''மனேஜர் ஐயா! அவர்களைக் குறை சொல்லக் கூடாது. அவர்களுக்கு என்னிடம் நிறைய அன்பு இருக்கிறது''

''உண்மைதான் அண்ணாவியார். இந்தக் கிராம மக்கள் அப்பாவிகள், வஞ்சகம் இல்லாததுகள். விருந்து வைச்சு உபசரிப்பதில் அதுகளுக்கு ஒரு சந்தோசம்''

மாலை நேரம் 6 - 30 மணியிருக்கும். எல்லோரும் பிட்டி ஓலை வைரவர் கோயிலில் கூடுகிறார்கள். அரிக்கன் லாம்பு இரண்டு எரிகின்றன.

பண்டாரி கந்தையா தான் அந்தக் கோயில் முதலாளி. கோயில் ஏதோ பெரிய கட்டடத்தைக் கொண்டதல்ல. அது மண்ணாலும், மரத்தாலும் ஆகியது. கிடுகினால் வேயப்பட்டது. மூலஸ்தானத்தில் ஒரு சிறிய சூலம். அவ்வளவுதான்.

பூசாரி விளக்கு வைக்கிறார். தமக்குத் தெரிந்த தேவாரத் திருப்பதிகங்களைப் பாடுகின்றார். இடைக்கிடை புராணமும் பாடப்படுகிறது. அவரைப் பொறுத்தவரையில் எல்லாம் தேவாரமே.

தூப தீபம் காட்டப்படுகின்றது. பின்னர் எல்லோரும் கற்

பூரத்தைத் தொட்டு வணங்கு கிறார்கள். அண்ணாவியார் உடுக்கடித்து மாரியம்மன் மீது இரண்டொரு பாடல்களைப் பாடுகிறார்.

மனேஜர் பண்டாரி கந்தை யர் எழுந்து வைரவப் பெரு மானை வணங்கியபின் பேசுகி றார்.

அண்ணாவியாருடைய பெரு மைகளைச் சொல்லி கூத்து ஒலைகளைக் (பிரதி) கொடுக்கச் சொல்கிறார்.

அண்ணாவி வல்லி கம்பீர மாக எழுந்து நிற்கிறார். அப் போது மனேஜர் பண்டாரி கந்தையர் புதிய மாறுகரைச் சால்வை ஒன்றில் 10 ரூபாவை முடிந்து அண்ணாவியாரின் தோளில் போட்டுக் கௌரவிக் கின்றார். எல்லோரும் கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அண்ணாவியார் பேசத் தொடங்குகினார்:

"பெரியோர்களே, தாய்மார் களே நாம் பழகப் போகின்ற கூத்து காத்தவராயன் கூத்து; காத்தவராய சுவாமிகளுடைய கதை. எங்களை வாழ வைக்கும் மாரி அம்மனின் மகன் தான் காத்தவராய சுவாமி! நாங்கள் நோய் நொடி இல்லாமல் சுகமாக வாழ இந்த ஆச்சிதான் துணை. ஆனபடியால் கூத்துப் பழகத் தொடங்குகிற இன்றிலிருந்து ஒவ்வொருவரும் விரதம் இருக்க வேணும். விரதம் எண்டால் சாப்பிட வேண்டாம் என்று சொல்லவில்லை. மச்சமாமிசம் சாப்பிடக் கூடாது. கள்ளுச் சாராயம் குடிக்கக் கூடாது, பீடி சுருட்டுப் புகைக்கக்கூடாது. இன்னுமொரு விசயம். அது நான் திருமணமானவர்களுக்குத் தனியச் சொல்லுவன். கூத்துப் பழக்கி மேடையேற்றி கடைசி யாக உடுப்புக் கழட்டுகிறவரை நானும் குடிக்கமாட்டேன். மச்சமாமிசம் தின்னமாட்டேன். இதைப் பின்பற்றுகிறவர்கள் மட்டும் கூத்துப்பழக வரலாம்."

அண்ணாவியார் மேலும் தொடர்ந்தார்:

"யாராவது சின்னப் பிழை விட்டால் கூட அந்த ஆச்சி பொறுத்துக் கொள்ள மாட் டாள். சின்னமுத்து, பொக்கு ளிப்பான் என்று நோய் நொடி களை ஊருக்குத் தந்துவிடுவாள். இந்த ஊரிலே அப்படி ஏதாவது வந்தால் அதற்கு நீங்கள்தான் பொறுப்பு" அண்ணாவியார் ஒரு வகையில் பக்திப் பரவச நிலை யிலே நின்றபடி பேசி முடித்தார்.

ஒரு நிமிசம் ஒரே மௌனம்.

காத்தானாக ஆடப்போகும் சின்னத்தம்பி எழுந்தான்.

"அண்ணாவியார் ஐயா, நாங்கள் 'இந்த முடிவை எப் போதோ எடுத்து விட்டோம். ஆனால் நீங்களும் இப்பிடி விர தம் இருப்பியள் என்பது எங்க ளுக்குத் தெரியாது"

மனேஜர் ஏதோ சொல்ல வாய் எடுக்கிறார்.

அண்ணாவியார் அவரைக் கையமர்த்திவிட்டுச் சொல்கி றார். "பெரியவர்களே, இது நான் புதிதாகச் செய்த முடி வல்ல. என்னுடைய குரு அண் ணாவி வேலரைத்தான் நான் பின்பற்றுகின்றேன். அவர் உங்கள் ஊரவர். அவர்தான் என்னு டைய தெய்வம். அவரும் தன் குரு பரம்பரையினரைத்தான் பின்பற்றி வந்தார். நான் இந் தக் கலையை உங்களுக்குச் சொல்லித்தரப் போகின்றேன். அதுமட்டுமல்ல. உங்களுக்குள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து

அவரை என்னுடைய வாரிசாக உருவாக்கப் போகிறேன். அவரும் என்னைப் பின்பற்றி இக் கலையைப் பரப்புவார் என எதிர்பார்க்கிறேன்.''

அப்பொழுது கந்தன் ஆக்ரோசத்துடன் உருக் கொண்டு ஆடத் தொடங்கினான்.

''அப்பு வைரவசுவாமி!''... எல்லோரும் ஒரே குரலில் கும்பிடுகிறார்கள்.

நான் வைரவர் அல்ல. இந்தப் பூமரத்தில் ஏறி நிற்கும் நான்தான் மாரி அம்மன்.

அண்ணாவியார் உடுக்கடித்து மாரியம்மன் பெயரில் பாடுகிறார்.

''துலங்கும் துலங்கும் என்று
முத்துமாரி அம்மன்—அவ
தூக்கியபடி வைத்தாவாம்
மாரி தேவி அம்மன்''

அண்ணாவியார் பாட மற்றவர்களும் சேர்ந்து பாடுகிறார்கள்-

''அம்மா தாயே! நீவந்த காரியமென்ன?'' பூசாரியார் பயபக்தியுடன் கேட்கிறார்.

''டே பூசாரி! விபூதித் தட்டைக் கொண்டுவா'' என்று உருவாடும் கந்தன் (மாரியம்மன்) பணிக்கிறான்.

''அம்மா கிழவி எங்களைக் காப்பாத்தம்மா. பிழை இருந்தால் பொறுத்துக் கொள்ளம்மா'' ஒரே கோரசாகப் பெண்கள் கும்பிடுகிறார்கள்.

விபூதித் தட்டுடன் பூசாரி வருகிறார்.

மாரியம்மனாக உருக்கொண்டாடும் கந்தன் விபூதித்தட்டை வாங்குகிறான்.

அண்ணாவியாரின் நெற்றியிலும், உச்சியிலும் விபூதியைப் பூசி ஆசீர்வதிக்கிறான். பண்டாரி சுந்தையமெக்கும் விபூதி இடப்படுகிறது.

கூத்து நல்லாக நடக்க நான் துணை இருப்பதாகச் சொல்லி மாரியம்மன் மலை ஏறுகிறாள். இதற்கு அறிகுறியாகக் கந்தன் மூர்ச்சித் நிலத்தில் விழுந்து விடுகிறான்.

எல்லோர் முகத்திலும் ஒரே மகிழ்ச்சி.

''என்ன இருந்தாலும் கிழவி கைவிடாள்'' அங்கிருந்தவர்கள் யாபேரும் ஏகோபித்த குரலில் சொல்லிக் கொள்கிறார்கள்.

''சரி சரி, எல்லாரும் இருங்கோ. அண்ணாவியார் கூத்து ஆடப் போகிறவர்களுக்கு ஓலை கொடுக்கப் போகிறார்'' மனேஜர் கட்டளை இடுகிறார்.

ஒவ்வொருவராக வந்து அண்ணாவியாரின் காலில் விழுந்து வணங்கிய பின் ஓலையை வாங்குகிறார்கள். பின்னர் வைரவசுவாமியையும், மாரியம்மனையும் கும்பிட்டு, ஓரிடத்தில் அமர்ந்து கொள்கிறார்கள். எழுதிய பிரதிகளைக் கூத்துப் பயிலப் போகின்றவர்களுக்குக் கொடுத்து முடித்தவுடன் அண்ணாவியார் கடவுள் வணக்கம் பாடிக் கூத்துப்படிக்கத் தொடங்குகிறார்.

''ஒரானைக் கன்னே
கண்ணே — எங்கள்
உமையாள் பெற்ற
பாலகனே
ஈரானைக் கன்னே
கண்ணே — எங்கள்
ஈஸ்வரியாள் பெற்ற
பாலகனே''

உடுக்குடன் இணைந்து அண்ணாவி வல்லியின் கம்பீரமான இனிய குரல் எங்கும் ஒலிக்கிறது.